உ

ஸ்ரீ மஹா கணபதயே நம :
ஸாம்ப பரமேஸ்வராய நம :

ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை
ஓம் நமோ நாராயணா

ஸ்ரீ குருப்யோ நம
ஸ்ரீ ராமஜெயம்

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

கருவறையில் வாழும் உயிர்களுக்கும் குருவருளே துணையாக இருக்கும் ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதி
ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த மஹாஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ விதுசேகர பாரதி ஸ்வாமிகள் அனுக்கிரஹத்துடன்

நெல்லை மாவட்டம், சிங்கிகுளம்

அருள்தரும் ஸ்ரீ ஆவுடை அம்பாள் சமேத அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

நாள் : 08-06-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்குமேல் 8.15 மணிக்குள்

உ

சிங்கிகுளம் அருள்தரும் ஸ்ரீ ஆவுடை அம்பாள் சமேத அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

தென்னாடுடைய சிவனே போற்றி என் நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இமை பொழுதும் என் நெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க
ஓம் நமோ பகவத்யை ஸச்சிதானந்த ரூபீண்யை
ஸ்வாத் மைவ பரதேவதா லலிதா

நெல்லை மாவட்டம் சிங்கிகுளம் கிராமத்தில் அருள் தரும் **ஸ்ரீ ஆவுடை அம்பாள் சமேத அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர்** ஆலயம் பஞ்ச லிங்க ஸ்தலங்களில் ஒன்றாகவும் தச வீரட்டான ஸ்தலங்களில் ஞானலிங்க ஸ்தலமாகவும் மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் இவைகளால் பெருமை கொண்ட இக்கோவில் சத்யோஜாத மூர்த்தம் என்ற பெருமையும் கொண்டது.

ஸ்ரீமத் பகவத் கிருபையாலும், ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்யாள் **ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த மஹா ஸ்வாமிகள், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ வித்து சேகர பாரதி ஸ்வாமிகள்** அவர்களின் பரம அனுக்கிரஹத்தாலும், சிருங்கேரி சாரதா பீடம் சென்னை மேற்கு மாம்பலம் தர்மாதிகாரி பிரம்மஸ்ரீ இராம கிருஷ்ண மாமா அவர்கள் ஆசீர்வாதத்தாலும் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான கொல்லம் **1200ம் ஆண்டு விஸ்வாவஸு** வருஷம் வைகாசி மாதம் 25ம் தேதி **(08-06-2025, ஞாயிற்றுக்கிழமை) பானுவாரமும்** சுக்லபட்ச துவாதசி திதி, சுவாதி நக்ஷத்திரம், சித்தயோகம், பூர்ண நேத்ரம், ஜீவன் உள்ள கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 7.00 மணிக்குமேல் 8.15 மணிக்குள் மிதுன லக்னத்தில் சிங்கிகுளம் **ஸ்ரீ ஆவுடை அம்பாள் சமேத ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி,** மஹாலிங்கம், ஸ்ரீ மஹா கணபதி, ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி, ஸ்ரீ பூர்ணா புஷ்களா சமேத தர்மசாஸ்தா, துர்க்கை, லெக்ஷ்மி, சரஸ்வதி, தக்ஷிணாமூர்த்தி, சனீஸ்வரன், பைரவர், சண்டீகேஸ்வரர் முதலான பரிவார தேவதைகளுக்கும் அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற உள்ளது. பக்த கோடிகளும், பொது மக்களும் விழாவில் கலந்து கொண்டு ஆண்டவன் அருள் பெற வேண்டுகிறோம்.

சர்வ சாதகம் : **ஸ்ரீ மஞ்சுநாதா பட்,** சிருங்கேரி மடம்,
கல்லிடைகுறிச்சி

S.V.S. மணி
அறங்காவலர், சிங்கிகுளம்
செல் : 94440 15526

நிகழ்ச்சி நிரல்

கும்பாபிஷேகம் :- விஸ்வாவஸு வருஷம் வைகாசி மாதம் 25ம் தேதி (08-06-2025)

தமிழ் தேதி	ஆங்கில தேதி	கிழமை	நேரம்	விபரம்
வைகாசி 23ம்தேதி	06.06.2025	வெள்ளி	காலை 8.00 மணி	குரு பிராத்தனை - அனுக்ஞை - விக்னேச்வர பூஜை - பூர்வாங்கம் மஹா சங்கல்பம், புண்யாகவாசனம் கும்ப பூஜைகள், மஹா கணபதிஹோமம், கோ பூஜை, பிரம்மசாரி பூஜை நவக்கிரக ஹோமம், சுதர்சன ஹோமம், துர்கா ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாத விநியோகம்.
			மாலை 5.00 மணி	தீர்த்த ஸங்கரஹணம் - வாஸ்து ஹோமம் - ரக்ஷாக்ன ஹோமம் (ப்ரவேசபலி) யாகசால பிரவேசம், ம்ருதஸங்கரஹணம் அங்குரார் பணம், ஆசார்ய வர்ணம், ரக்ஷாபந்தனம் கலா கர்ஷணம்.
				முதல் கால யாகசாலை பூஜை - ஹோமம் - பூர்ணாஹுதி, சதுர்வேத பாராயணம், பிரசாத விநியோகம்.
வைகாசி 24ம்தேதி	07.06.2025	சனி	காலை 8.00 மணி	மங்கள இசை, 2ம் கால விசேஷ யாகங்கள், கன்யா பூஜை, சுவாஸினி பூஜை, தம்பதி பூஜை, வேதபாராயணம், தீபாராதனை, பிரசாத விநியோகம்.
			மாலை 5.00 மணி	மூன்றாவது கால யாகசாலை பூஜைகள், வேதபாரயணம், பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாத விநியோகம்.
			இரவு 8.00 மணி	யந்திர ஸ்தாபனம், அஷ்ட பந்தன மருந்து சாத்துதல்.
வைகாசி 25ம்தேதி	08.06.2025	ஞாயிறு	காலை 4.00 மணி	நான்காம் கால பூஜை, வேதிகா அர்ச்சனை, வேத பாராயணம், ஹோமங்கள், ஸ்பர்ஸாஹுதி ப்ராண பிரதிஷ்டை, ரக்ஷா பந்தனம், பூர்ணாஹுதி - யாத்ரா அனுக்ஞை, யாத்ரா தானம் கடயாத்ரா.
			8.00 மணி	கும்பம் எழுந்தருளல் - சுவாமி - அம்பாள் - விமானம் சன்னதிகள் கும்பாபிஷேகம். மற்ற சன்னதிகள் மஹா அபிஷேகம் ஆராதனை - அர்ச்சனை
			மாலை 6.00 மணி	பிரதோஷ வழிபாடு
			இரவு 8.00 மணி	அம்பாள் ஸ்வாமி திருக்கல்யாணம் உற்சவ மூர்த்திகள் கோவில் பிரகார ஊர்வலம்.

06.06.2025 முதல் 08.06.2025 வரை மூன்று நாட்களும் எல்லா வேளைகளும் அன்னதானம்

உ

சிவமயம்

அருள்தரும் ஸ்ரீ ஆவுடை அம்பாள் சமேத - அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்

சிங்கிகுளம் - 627152.

நாள் : 05 - 06 - 2025, வியாழன், வைகாசி மாதம் 22-ம் தேதி

ஸ்ரீ வரதராஜ பெருமாள், ஸ்ரீ மலை பகவதி அம்மன் திருக்கோயில் வருஷாபிஷேகம் நடைபெறும்.